# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2020ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 30.09.2020. | 1)மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 15.11.2011ஆம் தேதிய மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாட்டில் தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளாட்சித் தேர்தல் வாக்குறுதியில் தெரிவிக்கப்பட்டபடி ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக புதிய திட்டம் செயல்படுத்த அறிவுரை வழங்கப்பட்டது.<br>அதன்பேரில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மாநகராட்சிக்குட்பட்ட மீளவிட்டான் கிராம பஞ்சாயத்து பகுதியில் மீன்வளக் கல்லூரிக்கு எதிரில் சுமார் 30 ஏக்கர் நிலப் பரப்பில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க இடம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் தொழிற்சாலை பயன்பாட்டிற்கான புறம்போக்கு இடமாகும்.<br>தூத்துக்குடி மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மாமன்றத் தீர்மானம் எண். 214 நாள் 15.10.2012இல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தேர்தல் வாக்குறுதி என்பதாலும் மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் எஸ்.ஏ.வி. பள்ளி விளையாட்டு மைதானம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை மற்றும் அண்ணா பேருந்து நிலைய மேற்கு பக்கமுள்ள தென்வடல் சாலை இடமும் சேர்ந்தாற்போல் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கொண்டு வரப்பட வேண்டும் என தீர்மானித்தது.<br>இந்நிலையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாமன்றமும் மாறுபட்ட கருத்துக்களை கூறியதால் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக முடிவு செய்யப்பட்ட இடங்களின் சாத்தியக்கூறு குறித்து தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் இடம் தேர்வு செய்ய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (மாந6) அரசாணை எண். (டி) 94 நாள் 27.02.2013இல் ஆணை பிறப்பித்துள்ளது.<br>அதன்பேரில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக உரிய இடம் தேர்வு செய்ய தொழில் நுட்ப வல்லுநர்களை நியமிக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் பிரேம் சௌத்ரி அசோசியேட்ஸ் (பி) லிமிட் புது டெல்லி என்ற நிறுவனத்தினருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு அதனடிப்படையில் மேற்கண்ட நிறுவனத்தால் இடைக்கால இறுதி வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு மேற்கண்ட அறிக்கையில் மீன்வளக்கல்லூரிக்கு எதிரே ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யலாம் என தெரிவித்துள்ளது.<br>தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். டி3/37327/2012 20.11.2014ஆம் தேதிய கடிதத்தில் தூத்துக்குடி நகரத்தில் மாண்புமிகு தமிழக முதுல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டமான ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக மீளவிட்டான் பகுதி 2 கிராம புல எண் 1687 மற்றும் பல புல எண்கள் உள்ளடங்கிய 67.27.5 | 157)<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

ஹெக்டேர் பரப்பளவு இடத்தின் தேவையான பரப்பளவு இடம் குறித்து மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க கேட்டுக்கொண்டுள்ளதை தொடர்ந்து இவ்வலுவலக மாமன்றத் தீர்மானம் எண். 146./28.11.2014ஆம் தேதியிட்ட மாமன்றத் தீர்மானத்தில் மேற்கண்ட புல எண்கள் அடங்கிய தொழில்துறை புறம்போக்கு இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைவதற்கு 25 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்து தரக்கோரி தீர்மானித்தது.

தற்போது மேற்கண்ட திட்டப்பணி தொடர்பாக ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மீன்வளக்கல்லூரிக்கு எதிர்புறம் உள்ள தொழில்துறை புறம்போக்கு நிலத்தில் 25 ஏக்கல் பரப்பளவுல் அமைப்பதற்கு மேற்கண்ட இடத்தில் முன் நுழைவு அனுமதி (Enter upon permission) வழங்குமாறு மாநகராட்சியால் 20.04.2015 மற்றும் 20.05.2015இல் மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அரசு செயலாளர், தொழில்துறை செயலகம், சென்னை அவர்களுக்கு 09.08.2015இல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் அரசு கூடுதல் செயலாளர், தொழில்துறை அவர்களின் கடிதம் எண். 19 நாள் 11.02.2016இல் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக மீளவிட்டான் பகுதி 2 புல எண்கள் 1139/1ஏ 1139/2ஏ. 1147.பகுதி 1677/1 1677/2, 1678/ பகுதி ஆகியவற்றில் உள்ள தொழில்துறை புறம்போக்கு மற்றும் தொழில்துறை விஸ்தரிப்பு நிலங்களில் 10.0705 ஹெக்டேர் நிலத்தினை ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைத்திட அனுமதி மற்றும் தடையில்லாச் சான்று கோரும் தங்களின் செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

1) எதிர்காலத்தில் தொழில விஸ்தரிப்பு சம்பந்தமாக தூத்துக்குடி மாவட்டத்தில நிலம் இத்துறைக்கு தேவைப்படுமானால் தற்போது வழங்கப்பட்ட நிலங்களுக்கு இணையான மாற்று நிலம் (Free of cost ) வழங்க வேண்டும்.
2) வருவாய்த்துறையின் உரிய ஒப்புதல் பெற்று நில மாற்று பணியை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களுக்கு பார்வை 12இல் கண்டுள்ள அரசு கூடுதல் செயலாளர் தொழில்துறை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண். டி3/37237/2012 நாள் 25.06.2016இல் மேற்படி ஒருங்கிணைந்த பேருந்து நிலைய பணிகளுக்கு முன் நுழைவு அனுமதி (Enter upon permission) வழங்கப்பட்டுள்ளது..

இந்நிலையில் மேற்படி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2011.12இன் கீழ் ரூ. 1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பணிகள் மேற்கொள்ளாதது மற்றும் நிதி பயன்பாடு இல்லாத காரணம் காலதாமதம் ஆகியவற்றினால் நகராட்சி நிர்வாக அணையர் சென்னை அவர்களின் செயல்முறை எண். 47923/இ1/2011 நாள் 19.07.2013இல் மேற்படி திட்ட நிதி மான்யத்தொகை வட்டித்தொகையடன் திருப்பி அனுப்பி வைக்க கேட்டுக் கொண்டதற்கிணங்க மாநகராட்சியால் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்திற்கு 06.08.2013இல் மான்யத்தொகை வட்டியுடன் திருப்பு அனுப்பி வைக்கப்படடது.

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் இரண்டு பேருந்து நிலையங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. ஒன்று பாளை ரோடு சாலையில் அமைந்துள்ள

பழைய பேருந்து நிலையம் மற்றொன்று எட்டையாபுரம ரோட்டில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையம் தூத்தக்குடி மாநகரிலிருந்து திருநெல்வேலி, தென்காசி கேரளா போன்ற மேற்கு திசைக்கு செல்லும் பேருந்து மற்றும் திருச்செந்தூர் நாகர்கோவில் போன்ற தெற்குப் பகுதிக்கு செல்லும் பேருந்துகளும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படுகின்றன.

நகரின் மையப் பகுதியில் சுமார் 1 ½ ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்திலிருந்து தனியார் பேருந்துள், அரசு பேருந்துகள், நகர பேருந்துகள் மற்றும் மினி பேருந்துகள் என சுமார் 2000 நடைகளாக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பழைய பேருந்து நிலையம் நகரின் மையமாக அமைந்து இருப்பதால் மிகவும் நெருக்கடியான போக்குவரத்து உடையதாக உள்ளது. இதன் அருகில் மார்க்கெட், மாநகராட்சி அலுவலகம் அரசுதலைமை மருத்துவமனை மாவட்ட நீதிமன்றம் போன்றவை அமைந்து இருப்பதாலும் இப்பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் அகலம் குறைந்ததாக இருப்பதாலும் அடிக்கடி இங்கு போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன.

பழைய பேருந்து நிலையத்தில் போதிய இடவசதி இல்லாததால் எட்டையாபுரம் சாலையில் சுமார் 4½ ஏக்கர் நிலப்பரப்பில் 1993ம் ஆண்டு புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. இதில் ஒரு பக்கத்திற்கு 28 பேருந்துகள் நிற்கும் விதமாக 56 பேருந்துகள் இயக்கும் நிலையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையத்திற்கு வகுப்பு ஏ சான்று பெறப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையத்திலிருந்து கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி போன்ற பகுதிகளுக்கு செல்லும் பேருந்துகள் மதுரை மற்றும் சென்னை செல்லும் பேருந்துகள் ஆகியவை இயக்கப்படுகின்றன. அரசு விரைவு போக்குவரத்து பேருந்துகளும் இப்புதிய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இனி வருங்காலங்களின் பெருகி வரும் மக்கள் தொகை போக்குவரத்து நெருக்கடி ஆகியவற்றை கருத்தில் கொண்டு மேற்படி புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றபடியாலும், மேற்படி கட்டிடத்தின் மேற்கூரை, சுவர் ஆகியன பழுதடைந்த நிலையில் உறுதியிழந்து காணப்படுகிறது. மேலும் மேற்படி புதிய பேருந்து நிலையத்தின் நுழைவு வாயில் அருகில் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான மேம்பாலம் மற்றும் 3வது இரயில்வே கேட் முதல் 4வது இரயில்வே கேட் வரை இரட்டை இரயில் பாதை அமைத்தல் மற்றும் இரயில்வே நடைமேடை விஸ்தரிப்பு பணி ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் இப்பகுதி கடுமையான போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியாக இருந்து வருகிறது.

எனவே நகரின் மையப் பகுதியில் மேற்படி புதிய பேருந்து நிலையத்தினை முற்றிலும் அகற்றிவிட்டு மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் நோக்கில் சென்னை, கோவை, பெங்களூரு போன்ற பெரிய மாநகரங்களில் உள்ள பெரிய அளவிலான வணிகவளாகம் (Shopping Mall) கட்டி இயக்கி பராமரிக்கும் முறையில் தனியரிடம் ஒப்படைப்பு செய்யும்பட்சத்தில் மாநகராட்சிக்கு சீரான வருவாய் ஈட்ட வழிவகை உள்ளது. தூத்தக்குடி மாநகரில் பெயரில் துறைமுகம், அனல்மின் நிலையம், ஸ்பிக் உர நிறுவனம். எரிவாயு நிறுவனம் மின்சார சக்தி நுகர்வோரின் தேவைகள் பூர்த்தி செய்யும் வண்ணம் நவீன வசதிகளுடன் திரையரங்குகள் உள்ளிட்ட வசதிகள் நிறைந்த பெரிய வணிக வளாகம் (Shopping Mall) கட்டுவது மிகவும் உகந்ததாக அமையும் அதன்பேரில் மாநகராட்சிக்கும் நிதிவருவாய் கிட்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தின் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து

| | | |
|---|---|---|
| | நாள்தோறும் வணிகம் மற்றும் பணிகளுக்கு வந்து செல்லும் பொது மக்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருந்து வருவதால் போக்குவரத்து நெருக்கடி காணப்படுகிறது. எனவே இனி வருங்காலங்களில் மாநகரில் போக்குவரத்து நெருக்கடி குறைக்கும் விதமாக ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகிறது.<br>தற்போது மாநகரத்தின் பெருமளவு வளர்ச்சியானது மேற்கு வடக்கு மற்றும் தெற்கு பகுதி நோக்கி வளர்ச்சி கண்டு வருகிறது. தூத்துக்குடியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களின் மாவட்ட ஆட்சியர் மாநாட்டு அறிவிப்பாக உள்ளதாலும், மாநகரப்பகுதியில் பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் போக்குவரத்து நெருக்கடி ஆகியவற்றை கருத்திற்கொண்டும் மேற்கு வடக்கு மற்றும் தெற்கு சாலைகளை இணைக்கும் புறவழிச்சாலைப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறின்றி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மீன்வளக்கல்லூரிக்கு எதிர்புறம் உள்ள தொழில்துறை நிலத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் அமைப்பதால் பொது மக்களுக்கு மிகுந்த பயனளிக்கக்கூடிய திட்டமாக இருக்கும்.<br>மேலும் மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு பகுதியில் இருந்து வரும் புறநகர் பேருந்துகள் மற்றும் சென்னை பெங்களுரு போன்ற பெரிய நகரங்களுக்கு இயக்கப்படும். ஆம்னிபேருந்துகள் அனைத்தும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் இருந்து செயல்படுத்தப்படுவதால் மாநகர் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி வெகுவாக குறையும், மாநகர் பகுதிகளை நகரப்போக்குவரத்து நெருக்கடி குறைந்து காணப்படும்.<br><br>ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையின்படி, தோராயமாக ரூ. 60.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய 2014ம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் சில காரணங்களால் இத்திட்டம் தொடர்பான மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது. தற்போது, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழியாக தமிழ்நாடு நகர்ப்புற கூட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் உரிய கலந்தாலோசகர் நியமனம் செய்ய கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் உரிய கலந்தாலோசகர் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கலாம். இ1/15104/2011 | |
| | **2)**இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்—தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணியில் தூத்துக்குடி மாநகராட்சி தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திறந்த வெளியில் மலம் கழித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திடக்கழிவுகளை குறைத்திடும் வழிமுறைகளை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு பரப்புரையாளர்கள், மண்டல மேற்பார்வையாளர்கள், ஒருங்கிணைப்பாளர் வெளிகொணர்வு முறைப்படி **6** மாதம் காலத்திற்கு **01.10.2020** முதல் **31.03.2021** வரை சப்ளை செய்யும் பணிக்கு **21.09.2020** அன்று வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை | **158)**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 22.09.2020 அன்று திறக்கப்பட்டது.<br><br>1. M/S.AMK. Manpower Service, Nagercoil - ஒப்பந்ததாரர்<br>2.M/s.Pentaforce Securties, Chennai - ஒப்பந்ததாரர்<br>3.M/s. Best HR Com. Chennai - ஒப்பந்ததாரர்<br>4. M/s. Falcom (C) Security Services Pvt. Ltd. Chennai. - ஒப்பந்ததாரர்<br>மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் ஒரு ஒப்பந்ததாரர் தொழில் நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண். 313 நாள் 28.09.2020ல் தொழில்நுட்ப தகுதியுடைய நிறுவனம் M/S.AMK. Manpower Service, Nagercoil - நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை திறக்க ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்ததின் பேரில் 30.09.2020 அன்று திறக்கப்பட்டதில் மேற்படி நிறுவனம் சேவை கட்டணமாக 9.99 % அளித்துள்ளனர். நிறுவனம் அளித்தள்ளசேவை கட்டணமானது 10 % க்கு மிகாமல் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தூய்மை இந்தியா திட்ட பணியின் அவசர அவசியம் கருதி M/S.AMK. Manpower Service, Nagercoil நிறுவனம் அளித்துள்ள சேவை கட்டணத்தினை அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1) M/S.AMK. Manpower Service, Nagercoil - நிறுவனம் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>File No. H3/01889/2020 | |
| | 3)இம்மாநகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவின் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் முதிர் கொசுக்களை ஒழிக்க VEHICLE MOUNTED FOGGING MACHINE மூலம் இம்மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் OUTDOOR மற்றும் INDOOR FOGGING வகைக்கு பயன்படுத்தப்படும் பைரித்திரம் ( PYRETHRUM 2 % EXTRACT) என்ற மருந்தினை TNMSC அனுமதி பெற்ற M/s Paramount Pesticides Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 1100/– (Plus GST @ 18% Rs. 198 = Rs. 1298/-) வீதம் 1000 லிட்டர் வாங்கிடவும்.<br>கழிவு நீரின் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் BT (Bacillus Thuringiensis Var Israelensis 5% WP Stain) என்கிற மருந்தினை கொள்முதல் செய்வதற்கு TNMSC அனுமதி பெற்ற M/s. Ajay Bio-Tech) (India) Ltd. Pune நிறுவனத்தின் மூலம் 1 கிலோ ரூ. 1047./ (Plus GST @ 12% Rs. 125.64 = Rs. 1172.64 ) வீதம் 1000 கிலோ வாங்குவதற்கும் மற்றும் மேற்கண்ட வேதி மருந்துகளை கொள் முதல் செய்வதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 25,00,000/–வரை (ரூபாய் இருபத்தைந்து இலட்சம்) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். | 159)<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | எச்2/ 7958/13 | |
| | 4)தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் உள்ள அனைத்து தெருவிளக்குகள் இயக்கி பராமரிக்கும் பணிகளை கண்காணித்தல் பொது மக்களின் கோரிக்கைகளுக்கேட்ப புதிய தெருவிளக்குகள் அமைத்தல் சம்பந்தமான மின்வாரிய கோப்புகள் பராமரித்தல் புகார்களை நேரில் ஆய்வு செய்து உடன் நடவடிக்கை எடுத்தல் மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களிலும் ஏற்படும் பழுது பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் மாதாந்திர மின் கட்டணங்களை கணிணியில் பதிவு செய்து சரிபார்க்க மற்றும் இதர மின் சம்பந்தமான பணிகள் அனைத்தும் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாததாலும் ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்படும் பணிகளை உடனுக்குடன் செய்து முடிப்பதில் அதிக சிரமங்கள் ஏற்பட்டு வருவதாலும் ஏற்கனவே உள்ள இரண்டு களப்பணியாளர்களை மட்டும் வைத்து முழு அளவில் பணிகளை விரைவுபடுத்த இயலாத சூழலில் கீழ்க்கண்ட இரண்டு பணியாட்களை தற்காலிக அடிப்படையில் நகர்புற வாழ்வாதாரமையம் மூலம் பெற்று பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.<br>1) தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல் பட்டயம் பெற்றவர்)<br>1 எண்ணம் (Technical Assistant)<br>2)கணிணி ஆப்பரேட்டர் – 1 எண்ணம்<br>(Computer Operator)<br>இவர்களது அனுமதி காலம் 04.10.2020 ம் தேதியுடன் முடிவடைவதால் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியதன் அத்தியாவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி 05.10.2020 முதல் 04.10.2001 வரை உள்ள ஓர் ஆண்டு காலத்திற்கு மேற்படி பணியாட்கள் இருவரையும் நகர்புற வாழ்வாதாரம் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க. K3/9128/2020 நாள் 09.09.2020 ல் 2020–2021ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் ஆகும் தோராய செலவினம் ரூ. 3.80/– லட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்.3654/2018/E5 | 160) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | 5)இம்மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட ராஜகோபால்நகர் சேரன் கடைஅ ருகில் உள்ள நிகிலேசன் நகரின் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள காலி இடத்தில் ஒரு பகுதியில் காவல்துறையின் தற்காலிக புறக்காவல் நிலையம் 16 X 10 அளவில் (Police of Post)அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்து தர கோரி காவல்துறையினரிடம் இருந்து விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தற்காலிக புறக்காவல் நிலையம் அமைக்க கோரும் இடம் வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மீளவிட்டான் பகுதி 1 புல எண். 530/1 யில் அமையும் நிகிலேசன் நகரில் அமையும் மனைபிரிவு இடத்தில் மனுதாரர் தற்காலிக புறக்காவல் நிலையம் 16' X 10' அளவில் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கிட வேண்டப்பட்டதின் அடிப்படையில் மேற்படி இடத்தில் தற்காலிக செட் மட்டும் | 161) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 16’ X 10’ அடி அளவில் பூங்காவில் தென் கீழ்புறம் இடம் ஒதுக்கீடு செய்து தற்காலிக புறக்காவல் நிலையம் அமைக்க இணைப்பு வரைபடத்தில் குறிப்பிட்ட இடத்தில் தற்காலிக கூரை கொண்ட கூடாரம் மட்டும் அமைக்கவும் மேலும் பிற்காலத்தில் விரிவாக்கத்திற்கு தேவைப்படும்பட்சத்தில் எந்தவித ஆட்சேபனையின்றி எப்படி இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதோ அதே மாதிரி இடத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும். மேலும் மேற்படி இடத்தில் அமைக்கக்கூடிய தற்காலிக புறக்காவல் நிலையத்திற்கு மின்சார இணைப்பு மற்றும் இதர வசதிகள் மாவட்ட காவல்துறை மாவட்ட காவல்துறை நிர்வாகமே தங்களது சொந்த பொறுப்பில் அமைத்துக்கொள்ள வேண்டும் மேற்படி விபரங்களுடன் காவல் துறை ஏற்றுக்கொண்ட உரிய சான்று உறுதி மொழியினை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும்பட்சத்தில் மேற்படி பூங்கா குறிப்பிட்ட பகுதியில் தென்கிழக்கு பக்கம் 16’ X 10’ அளவில் இட ஒதுக்கீடு செய்து தர ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களால் அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். எப்1/3180/2020 வம | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 30.09.2020